Roll No. | | | | | |

**INDIAN SCHOOL SALALAH**

**FIRST TERM EXAMINATION – SEPTEMBER 2026**

**TAMIL – SL (006)**

**Class: IX** **DATE: 22.09.2026**

**Time: 3hours** **Maximum Marks:80**

## பகுதி (அ) (படித்தல்)

**1.கீழ்க்காணும் பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளி.** 5x1=5

தென்னிந்தியாவின் அடையாளச் சின்னமாக காங்கேயம் மாடுகள் போற்றப்படுகின்றன**.** தமிழக மாட்டினங்களில் தாயினம் என காங்கேயம் கருதப்படுகிறது. பிறக்கும்போது சிவப்பு நிறத்தில் இருக்கும் காங்கேயம் கன்றுகள் ஆறு மாதம் வளர்ந்த பிறகு சாம்பல் நிறத்துக்குமாறி விடுகின்றனர். பசுக்கள் சாம்பல் அல்லது வெள்ளை நிறத்தில் இருக்கின்றன. மிடுக்கான தோற்றதிற்த்குப் பெயர் பெற்ற காங்கேயம் இனக் காளை ஏறுதழுவுதல் நிகழ்விற்கும் பெயர் பெற்றுள்ளன. அத்துடன் ஏர் உழுவதற்கும் வண்டி இழுப்பதற்கும் அதிகம் பயன்படுத்தப்படுகின்றன.கடுமையான உழைக்கக்கூடிய காங்கேயம் மாடுகள் கேரளம், கர்நாடகம், ஆந்திரம் ஆகிய மாநிலத்தவரால் விரும்பி வாங்கிச் செல்லப்படுகின்றன. இலங்கை, பிரேசில், பிலிப்பைன்ஸ், மலேசியா ஆகிய நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. கரூர் அமராவதி ஆற்றுத் துறையில் காங்கேயம் மாடுகளின் உருவம் பொறித்த கி.மு. முதலாம் நூற்றாண்டைச் சேர்ந்த சேரர் கால நாணயங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

**வினாக்கள்**

I. மிடுக்குத் தோற்றத்திற்கும் ஏறு தழுவுதலுக்கும் பெயர் பெற்றவை எவை?

II. காங்கேயம் மாடுகள் எந்த மாநிலத்தவரால் விரும்பி வாங்கி செல்கின்றன?

III. காங்கேயம் மாடுகள் எதற்கு அதிகம் பயன்படுத்தப்படுகின்றன?

IV. காங்கேயம் மாடுகள் உருவம் பொறித்த நாணயங்கள் எந்த நூற்றாண்டு கண்டெடுக்கப்பட்டுள்ளன?

V. காங்கேயம் மாடுகள் எந்தெந்த நாட்டிற்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன?

### பகுதி (ஆ) (இலக்கணம்) - GRAMMAR

**2. சான்று தருக.** **5x1=5**

I. வற்றல் தின்றான் என்பது _______ ஆகுபெயருக்குச் சான்றாகும்.

அ) பொருள் ஆ) தொழில் இ) இடம் ஈ) பண்பு

II. நல்லபடாஅ பறை _______ அளபெடை

அ) செய்யுளிசை ஆ) இன்னிசை இ) சொல்லிசை ஈ) இன்னிசை

III. வினையெச்ச விகுதிக்கு சான்று ________________

அ) வளர்க ஆ) ஓடின இ) பாரீர் ஈ) வந்து

IV. நீட்டளவை ஆகுப்பெயருக்கு சான்று. ________________

அ) இரண்டு கிலோ கொடு ஆ) ஐந்து மீட்டர் வெட்டினாள்

இ) அரை லிட்டர் வாங்கு ஈ) ஒன்று பெற்றால் ஒளிமயம்

V. தொழிற்பெயர் விகுதி சான்று. ______________

அ) தல்,அல் ஆ) க,இய இ) அள்,ஆள் ஈ) அ,உம்

**3. நிரப்புக.** **5x1=5**

I. இடைநிலை --------------------- காட்டும்.

அ) காலம் ஆ) பொருள் இ) சந்தி ஈ) சாரியை

II. அளவையாகும் பெயர் ___________ வகைப்படும்.

அ) ஐந்து ஆ) இரண்டு இ) மூன்று ஈ) நான்கு

III. தொல்காப்பியர் ஆகுபெயரை______________வகுத்துள்ளார்.

அ) ஆறு ஆ) ஏழு இ) பதினாறு ஈ) மூன்று

IV. அளபெடுத்தல் என்பது ______________ ஆகும்.

அ) குறுகி ஒலித்தல் ஆ) நீண்டு ஒலித்தல்

இ) மாறி ஒலித்தல் ஈ) பேசி ஒலித்தல்

V. செய்யுளில் ஓசை குறையாத இடத்தில் இனிய ஓசையாக அளபெடுப்பது___________ அளபெடை ஆகும்.

அ) இன்னிசை ஆ) செய்யுளிசை இ) ஒற்றளபெடை ஈ) உயிரளபெடை

**4. இலக்கணக்குறிப்பு தருக.** **4x1=4**

I. தெள்ளமுது

அ) உருவகம் ஆ) பெயரெச்சம் இ) பண்புத்தொகை ஈ) வினைத்தொகை

II. விட்டு விட்டு

அ) அடுக்குத்தொடர் ஆ) இரட்டைக்கிளவி இ) பண்புத்தொகை ஈ) உருவகம்

III. அடுபோர்

அ) பண்புத்தொகை ஆ) பெயரெச்சம் இ) தொழிற்பெயர் ஈ) வினைத்தொகை

IV. உறுபொருள்

அ) அடுக்குத்தொடர் ஆ) எண்ணும்மை இ) உரிச்சொல் ஈ) உருவகம்

**5. பகுபத உறுப்பிலக்கணம்** **4x1=4**

I. “வளர்ப்பாய்” சரியான பகுபத உறுப்பிலக்கணம் தருக.

அ) வளர்+ப்+பாய் ஆ) வளர்+அப்+ஆய் இ) வளர்+ப்+ப்+ஆய் ஈ) வளர்ப்+ஆய்

II. நிறு + த் + தல் **“தல்”** என்பது ______________ விகுதி

அ) தொழிற்பெயர் ஆ) பலர்பால் இ) ஒன்றன்பால் ஈ) ஆண்பால்

III. அறை+த்(ந்)+த்+அன்+அன் **“த்”** என்பது __________ இடைநிலை

அ) நிகழ்கால ஆ) எதிர்கால இ) குளிர்கால ஈ) இறந்தகால

IV. இடைநிலைக்கும் விகுதிக்கும் இடையில் வருவது _____________

அ) சந்தி ஆ) சாரியை இ) விகாரம் ஈ) விகுதி

**பகுதி (இ) (இலக்கியம்) - LITERATURE**

**6. பின்வரும் பாடலைப் படித்து வினாக்களுக்கு விடை எழுதுக.** **5x1=5**

“கீசுகீ சென்றுஎங்கும் ஆணைச்சாத்தான் கலந்து
பேசின பேச்சரவம் கேட்டிலையோ? பேய்ப்பெண்ணே!
காசும் பிறப்பும் கலகலப்ப கைப்பேர்த்து
வாச நறுங்குழ லாய்ச்சியர் மத்தினால்
ஓசைப் படுத்த தயிரரவம் கேட்டிலையோ?
நாயகப் பெண்பிள்ளாய்! நாரா யணன் மூர்த்தி
கேசவனைப் பாடவும் நீ கேட்டே கிடத்தியோ?
தேசமுடையாய்! திறவேலோ ரெம்பாவாய் “ - ஆண்டாள்

<u>**வினாக்கள்**</u>

I. **“அனைச்சாத்தான்”** என்பதன் பொருள் __________________

அ) குயில் ஆ) கரிக்குருவி இ) ஆந்தை ஈ) மூப்பது

II. **“திருப்பாவை”** எந்த சமயத்தை பற்றி பாடப்பட்டுள்ளது?

அ) வைணவம் ஆ) சைவம் இ) புத்தம் ஈ) சைனம்

III. **“சூடிக் கொடுத்த சுடர்க்கொடி”** என அழைக்கப்படுபவர் யார்?

அ) மணிமேகலை ஆ) ஆண்டாள் இ) சுதமதி ஈ) மாதவி

IV. “**திருப்பாவை**” மொத்தம் எத்தனை பாடல்கள்?

அ) இருபது ஆ) ஏழுபது இ) பதினாறு ஈ) மூப்பது

V. “**அரவம்**” என்பதன் பொருள் ______________

அ) ஓசை ஆ) இசை இ) உறக்கம் ஈ) கூந்தல்

**7. கோடிட்ட இடங்களை தகுந்த <u>திருக்குறள்</u> சீர்களால் நிரப்புக.** **4x1=4**

I. மிகுதியான் மிக்கவை ___________ தாம்தம்
___________ வென்று விடல்.

II. செவியிற் சுவையுணரா __________ மாக்கள்
அவியினும் __________ என்

**8. எவையேனும் <u>குறுவினா</u>க்களுக்கு <u>ஆறினுக்கு</u> மட்டும் விடையளி.** **6x2=12**

I. கண்ணி என்பதன் விளக்கம் யாது?

II. ஏறுதழுவுதல் நிகழ்விற்கு இலக்கியங்கள் சுட்டும் வேறு பெயர்களை குறிப்பிடுக.

III. தென்திராவிட மொழிகள் ஏதேனும் நான்கினை எழுதுக.

IV. கூவல் என்று அழைக்கப்படுவது எது?

V. உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே- குறிப்புத் தருக.

VI. பழமணல் மாற்றுமின்; புதுமணல் பரப்புமின்- இடஞ்சுட்டிப்பொருள் விளக்குக.

VII. நிலம்போல யாரிடம் பொறுமை காக்கவேண்டும்?

VIII. உங்களது பள்ளியைச் சுற்றியுள்ள நீர்நிலைகளின் பெயர்களைக் குறிப்பிடுக.

**9. எவையேனும் <u>சிறுவினா</u>க்களுக்கு <u>மூன்று</u> மட்டும் விடையளி.** **3x3=9**

I. தமிழ்விடு தூது உணர்த்தும் தமிழின் சிறப்புகளை எழுதுக.

II. உவமையணியை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

III. அடுத்த தலைமுறைக்குத் தண்ணீர் தேவை - அதற்கு நாம் செய்ய வேண்டியவற்றை எழுதுக.

IV. தோழியை எழுப்பும் நிகழ்வைத் திருவெம்பாவை எவ்வாறு காட்சிப்படுத்துகிறது?

V. ஏறு தழுவுதல் திணைநிலைவாழ்வுடன் எவ்விதம் பிணைந்திருந்தது?

**10. எவையேனும் <u>நெடுவினா</u>க்களுக்கு <u>ஒன்றுக்கு</u> மட்டும் விடையளி.** **5x1=5**

I. ஏறு தழுவுதல் தமிழரின் அறச்செயல் என்று போற்றப்படுவதற்கான காரணங்களை விவரிக்க

II. காலந்தோறும் தன்னைப் புதுப்பித்துக் கொள்ளும் தமிழனின் தனித்தன்மைகள் பற்றி எழுதுக.

**பகுதி- (ஈ) (துணைப்பாடம்)**

**11. எவையேனும் துணைப்பாடக் கட்டுரைக்கு <u>ஒன்றுக்கு</u> மட்டும் விடையளி.**

**7x1=7**

I. “**தாய்மைக்கு வறட்சி இல்லை**” எனும் சிறுகதையில் வரும் ஏழைத்தாயின் பாத்திரப் படைப்பை விளக்குக.

**(அல்லது)**

II. “**தண்ணீர்**” கதையைக் கருப்பொருள் குன்றாமல் சுருக்கித் தருக.

**பகுதி - (உ) (படைப்பாற்றல்) CREATIVITY**

**12. பின்வரும் தலைப்புகளில் ஏதேனும் ஒரு கட்டுரை எழுதுக.** **6x1=6**

I.முன்னுரை- கைபேசி உள்ளங்கையில் உலகம் - இணைந்திருக்கும் உறவுகள்- பொழுதுபோக்கு - கையடக்க ஆபத்து விழிப்புணர்வோடு இருப்போம் - முடிவுரை

**(அல்லது)**

II. முன்னுரை- எரிசக்தியும் நாட்டு வளர்ச்சியும் - மின்சாரம் முதலான எரிசக்திகள்-

மரபுச் சார்ந்தவை - மரபுசாராதவை - இயற்கை ஆற்றலை பயன்படுத்துவோம் - மாசு குறைப்போம் - முடிவுரை

13. **பின்வரும் கடிதங்களுக்கு ஏதேனும் ஒரு தலைப்பில் கடிதம் ஒன்று எழுதுக.**7x1=7

I. உமது பகுதியில் திருட்டு போவதை தடுத்து பாதுகாப்பு வசதி செய்து தர வேண்டி காவல்துறை ஆணையருக்குக் கடிதம் எழுதுக.

**(அல்லது)**

II. உங்கள் பகுதியில் பல நாட்களாக தேங்கி கிடக்கும் குப்பைகளால் ஏற்படும் தொற்று நோய்கள் குறித்து அவற்றை உடனடியாக தூய்மை செய்து தர வேண்டி சென்னை மாநகராட்சிக்கு கடிதம் எழுதுக.

**இருக்கடிதங்களுக்கும் [ முகவரி - கவியரசி/ கவியரசன், எண்: 7, கம்பர் தெரு, சென்னை - 600005.]**

14. **பின்வரும் காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.** 2x1=2



*******************************************